SYDNEY WEST Area Health Service

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.

**BHC4975 Which women need a pap test – Tamil**

# எப்படியான பெண்களுக்கு பப் சோதனை தேவை?

பப் சோதனை பெண்களுக்கு கருப்பை புற்றுநோய் ஏற்படாமல் பாதுகாக்க உதவும் ஒரு இலகுவான சோதனை—ஆனால் பல பெண்கள் இது தங்களுக்குத் தேவையென்று உணருவதில்லை. குறிப்பாக 60 வயதுடைய குல்* தான் மிகவும் வயது முதிர்ந்தவர் என்ற காரணத்திற்காக இது தனக்குத் தேவையில்லை என்று எண்ணுகிறார், அதேநேரம் 21 வயதுடைய எலனி தான் வயது குறைந்தவள் என்ற காரணத்திற்காக இது தனக்கு தேவையில்லை என்று எண்ணுகிறார். 50 வயதுடைய மரியா தனக்கு ஒரு சோதனை தேவையில்லை என்று நம்புகிறார்—இவர் கடந்த 10 வருடங்களாக விதவையாக இருக்கிறார் அத்தோடு அவரின் கணவரின் இறப்புக்குப்பின் அவருக்கு பாலியல் கூட்டாளி எவரும் இருக்கவில்லை.

ஆனால் இந்த மூன்று பெண்களுக்கும் இரண்டு வருடங்களுக்கு ஒரு தரம் இந்த உயிர் காக்கும் சோதனை தேவை— 18-70 வயதிற்கு இடைப்பட்ட பெண்களுக்கு அவர்கள் ஒருபோதும் பாலியல் உறவு கொள்ளாவிட்டாலும் கூட தேவைப்படுவது போல். ஒரு பாலியல் கூட்டாளி மட்டும் உள்ள பெண்ணாயிருந்தாலும் சரி பல வருடங்களுக்கு பாலியல் உறவு கொள்ளாத பெண்ணாயிருந்தாலும் சரி அவர்களுக்கு ஒழுங்கான பப் சோதனைகள் தேவை.

## ஏன் பப் சோதனைகள் மிகவும் முக்கியம்?

ஏனென்றால் இது புற்றுநோய் விருத்தியடையமுன் கருப்பையில் (கருப்பையின் வாசல்) ஏற்படும் இயற்கைக்கு மாறான தன்மைகளைக் கண்டுபிடித்து உயிர்களைக் காக்கின்றது. ஒழுங்கான பப் சோதனைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை புற்றுநொயிற்கு இட்டுச் செல்லுவதற்கு முன் சிகிச்சையளிக்க இயலும்.

## புற்றுநோய் எனக்கு இருக்கிறது என்று நான் அறிந்து கொள்ள விரும்பாவிட்டால் என்ன நடக்கும்?

பப் சோதனைகள் புற்றுநோய் வராமல் தடுப்பதற்கு மேற்கொள்ளப் படுகிறது, புற்றுநோய் இருக்கிறதா என்று கண்டு பிடிப்பதற்கல்ல. அவற்றின் வேலை வேளைக்கு பிரச்சினைகளக் கண்டுபிடித்து புற்றுநோய் தொடங்குமுன் சிகிச்சை அளிப்பதாகும்.

## எனக்கு இறுதி மாதவிடாய் (வாழ்கையின் மாற்றம்) ஏற்பட்டிருந்தால் என்ன நடக்கும்?

உங்களுக்கு இன்னும் இரு வருடங்களுக்கு ஒரு முறை சோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்—கருப்பை புற்றுநோயின் அபாயம் வயது கூடும்போது அதிகரிக்கும்.

## எனக்கு ஹிஸ்டறெக்டொமி (அறுவைச் சிகிச்சை மூலம் கருப்பையை அகற்றல்) மேற்கொள்ளப் பட்டிருந்தால் என்ன நடக்கும்?

உங்களுக்கு ஹிஸ்டறெக்டொமி மேற்கொள்ளப்பட்டு கருப்பை மற்றும் சேர்விக்ஸ் (கருப்பையின் கழுத்து) அகற்றப்பட்டிருந்தால் உங்களுக்கு பப் சோதனை தேவைப்படாது—உங்களது வைத்தியருடன் ஆலோசியுங்கள்.

## எனக்கு 70 வயதிற்கு மேற்பட்டிருந்தால் என்ன நடக்கும்?

உங்களுக்கு 70 வயதிற்கு மேற்பட்டிருந்து ஒருபோதும் பப் சோதனை செய்யப்படாவிட்டால் உங்களுக்கு ஒரு சோதனை தேவைப்படும். ஆனால் கடந்த 5 வருடக் காலப்பகுதியில் இரண்டு சாதாரண பப் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் வேறு சோதனைகள் தேவைப்படாது (ஆனால் நீங்கள் விரும்பினால் தொடர்ந்து சோதனைகள் மேற்கொள்ளலாம்).

## எப்படி இந்தச் சோதனை செய்யப்படுகிறது?

சேர்விக்ஸில் (கருப்பையில் இருந்து பிறப்புறுப்புக்கு வரும் பாதையின் மேல் இருக்கிறது) இருக்கும் அணுக்களைப் பார்வையிடுவதன் மூலம். ஒரு வைத்தியர் அல்லது தாதி சேர்விக்ஸில் உள்ள சில அணுக்களைத் துடைக்க ஒரு சிறிய கலவைக் கரண்டி அல்லது ஒரு துடைப்பத்தை உபயோகிப்பார். இந்த அணுக்கள் பரிசோதனைக்கு ஒரு ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்படும். இச் சோதனை சிறு அசௌகரியத்தை உண்டுபண்ணும் ஆனால் வலி ஏற்படாது.

## கருப்பை புற்றுநோய் ஏற்படுவதற்குரிய காரணங்கள் என்ன?

இதற்குரிய காரணங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை ஆனால் சில வகை வைரஸ் மூலம் பிறப்புறுப்பில் ஏற்படும் மருக்களுக்கும் இதற்கும் தொடர்பு இருக்கிறது என்று கருதப்படுகிறது. இவை பாலியல் உறவின்போது பரவக்கூடும். புகைத்தல் கருப்பை புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கும்.

## கருப்பை புற்றுநோய் ஏற்படும் சாத்தியம் எவ்வளவு பொதுப்படையானது?

ஓவ்வொரு வருடமும் அவுஸ்திரேலியாவில் 1,000 பெண்கள் கருப்பை புற்று நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அறியப்படுகிறது அத்தோடு 300 பெண்கள் இதனால் மரணமடைகிறார்கள். கூடுதலான பெண்கள் ஒழுங்காக பப் சோதனைகள் செய்தால் கூடுதலான மரணங்களைத் தடுக்கலாம்.

## எங்கே நான் பப் சோதனை செய்து கொள்ள முடியும்?

ஒரு வைத்தியர், பெண்கள் உடல் நலத் தாதி, குடும்ப கட்டுப்பாட்டு மருத்துவமனை, பாலியல் உடல்நல மருத்துவமனை, அல்லது ஒரு பெண்கள் உடல்நல மையத்திற்குச் செல்லுங்கள். நீங்கள் ஒரு பெண் மருத்துவரை விரும்பி எப்படி அவரைக் கண்டுபிடிப்பது என்று தெரியாவிட்டால் உங்கள் பகுதியில் உள்ள ஒரு குடும்ப கட்டுப்பாட்டு மருத்துவமனை, பாலியல் உடல்நல மருத்துவமனை, பெண்கள் உடல்நல மையம், ஆகியவற்றை அழையுங்கள். தேவைப்பட்டால் மொழிபெயர்பாளர்கள் ஒழுங்குசெய்யப்படும். பின்வரும் விலாசத்தில் ஆங்கிலம் பேசாத பெண்களுக்கு விசேட சேவைகள் கிடைக்கும்: Fairfield Multicultural Family Planning Association 356 The Horsley Drive, Fairfield, (02) 9754 1322. ஒரு மெடிக்கெயார் தள்ளுபடி கிடைக்கும் ஆனால் அதன் செலவு எங்கே சோதனை செய்யப்படுகிறது என்பதில் தங்கி இருக்கிறது.

## எப்படி நான் எனது சோதனை முடிவுகளைப் பெற முடியும்?

நீங்கள் சோதனை செய்யும்போது உங்கள் வைத்தியர் அல்லது தாதியிடம் எப்படி நீங்கள் சோதனை முடிவுகளை அறியமுடியும் என்று கேளுங்கள். அத்தோடு உங்கள் பெயரை என் ஏஸ் டபிளியூ பப் சோதனை பதிவேட்டில் சேர்க்கும்படியும் நீங்கள் அவர்களைக் கேட்கலாம் – இந்த நம்பகமான சேவை நீங்கள் மறந்தாலும் பப் சோதனை செய்வதற்கு உங்களுக்கு நினைவூட்டும். பதிவேட்டின் தகவல் பல மொழிகளில் கிடைக்கும். மேலதிகத் தகவலுக்கு 1800 671 693 ஐ அழைக்கவும்.

தொலைபேசி எண்கள் பிரசித்த போது சரியாக இருந்தது ஆனால் தொடர்ந்து சரிபார்க்கப்பட மாட்டாது. நீங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் எண்களைச் சரி பார்க்க வேண்டும்.